DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 406 / 2023
Deposition of PW3/ LW9

| | | |
|---|---|---|
| Name | : | திரு.குணசேகரன் |
| Father's / Husband Name | : | வேலுச்சாமி |
| Village | : | பிச்சம்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29.05.2026.

1 ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>அரசுத் தரப்பில் BNSS பிரிவு 348 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அரசு தரப்பில் கூடுதல் சாட்சியாக முதல் விசாரணை :</u>

1.) நான் தற்போது கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான வரதராஜன் சார்பு ஆய்வாளர் பணி மாறுதலாகி சென்றுள்ளபடியால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் இந்த வழக்கின் கோப்பினை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 24.05.2023 ம் தேதி வரதராஜன் சார்பு ஆய்வாளர் நிலைய பொறுப்பில் இருந்த போது க.விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் உள் நோயாளியாக இருந்த தங்கப்பிரியா க.பெ.முத்துக்குமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பதிவு செய்து பின்பு கடமலைக்குண்டு காவல் நிலையம் வந்து க.விலக்கு காவல் நிலைய குற்ற எண்.212/2023 பிரிவுகள் 147,148,341,294(பி),323,324,506(2) இ.த.ச. மற்றும் 4

of TNPHW Act பிரகாரம் வழக்கு பதிவுசெய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** .

3.)அன்றைய தினம் 11.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான ராஜேஸ்கண்ணன் மற்றும் தெய்வம் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** .

4.) சாட்சிகள் 1 தங்கப்பிரியா, 2 முத்துக்குமார், 3 வீரமணி, 4 முருகன், 5 வித்யா மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் தனித்தனியே பதிவு செய்துள்ளார். அன்றை தினம் 14.00 மணிக்கு எதிரி A1 , A5 ஆகியோர்களை சிறப்பாறை காளியம்மன் கோவில் அருகில் வைத்து கைது செய்து பின்பு நிலையம் கொண்டுவந்து கனம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார். மற்ற எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை.

5) பின்பு வழக்கில் காயம் பட்ட தங்கப்பிரியா என்பவருக்கு சிகிச்சை செய்த க.விலக்கு அரசு மருத்துவமனை மருத்துவர் வித்யா அவரிடம் காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6**. பின்பு 06.07.2023 ம் தேதி அனைத்து விசாரணைகளையும் முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே குற்ற பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதியிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு எதிரிகளின் மீது பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.1 வது மற்றும் 5 வது எதிரிகள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் குறித்த சாட்சிகளின் முன்னிலையில் கைது செய்யாமல் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கும் , எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரிகள் அனைவரும் ஒன்றாக கூடியிருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஆஜர் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல .

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.05.29 13:03:25 +0530

Judicial Magistrate,
Andipatti.